BARA

வினாத்தாள் வரிசை **B** பதிவு எண் [ ]

# 2010

# தமிழ் மொழி மற்றும் இலக்கியம்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 300

வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. வினாத் தொகுப்பு [A], [B], [C] அல்லது [D] என நான்கு வரிசைகளில் அச்சிடப் பட்டுள்ளது. (இந்தப் பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்டும்.

   உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் [A] என்னும் வினாத் தொகுப்பு பெற்றிருந்தால் அவர் அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [B] [C] [D]

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்:- தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

இங்கே கிழிக்கவும் ✕ வினாத் தொகுப்பின் இம்மேலுறையை கண்காணிப்பாளர் கூறும் வரையில் கிழிக்கக் கூடாது ✕ இங்கே கிழிக்கவும்


https://www.freshersnow.com/syllabus/

1. பெண்ணிய நோக்கில் எழுத்தாளர் லஷ்மி அவர்களால் எழுதப்பட்ட புதினங்கள்

A) பெண், வைர மூக்குத்தி
B) நாகம்மாள், மண்ணாசை
C) மண்குடிசை, அல்லி
D) பாலும் பாவையும், சுயமை.

2. பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகச் சீர்திருத்தப் பணிகளால்

A) இரவு முழுவதும் நாடகங்கள் நடைபெற்றன
B) கீர்த்தனை நாடகங்கள் மறுமலர்ச்சி அடைந்தன
C) முழுமையான உரைநடை நாடகங்கள் எழுதி, நடிக்கப் பெற்றன
D) சிந்து நாடகங்கள் வளர்ச்சி அடைந்தன.

3. **பட்டியல் I** ஐ **பட்டியல் II** உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| | **பட்டியல் I** | | **பட்டியல் II** |
|---|---|---|---|
| a) | புதுமைப்பித்தன் | 1. | கி. ராஜநாராயணன் |
| b) | தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் | 2. | கல்கி |
| c) | தமிழகத்தின் வால்டர் ஸ்காட் | 3. | உலகச்சிறுகதைகள் |
| d) | கரிசல் கதைகளின் தந்தை | 4. | சங்கரதாஸ் சுவாமிகள். |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 1 | 3 | 4. |

4. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடுக்க :

A) அண்ணா, பாலசந்தர், சங்கரதாஸ் சுவாமிகள், சம்பந்த முதலியார்
B) சம்பந்த முதலியார், பாலசந்தர், சங்கரதாஸ் சுவாமிகள், அண்ணா
C) பாலசந்தர், அண்ணா, சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள்
D) சங்கரதாஸ் சுவாமிகள், சம்பந்த முதலியார், அண்ணா, பூாலசந்தர்.



https://www.freshersnow.com/syllabus/

5. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு :

A) குறிஞ்சி வேலன் — பருவம் ( கன்னட மொழிபெயர்ப்பு )

B) பாவண்ணன் — அக்னி சாட்சி ( மலையாள மொழிபெயர்ப்பு )

C) சிற்பி — விஷக்கன்னி ( மலையாள மொழிபெயர்ப்பு )

D) கே. வெங்கடாச்சலம் — மௌன ஓலம் ( கன்னட மொழிபெயர்ப்பு ).

6. பட்டியல் **I** ஐ பட்டியல் **II** உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | தனித்தமிழ் இயக்கம் | 1. | ரா. பி. சேதுப்பிள்ளை |
| b) | மணிப்பிரவாளம் | 2. | ஆனந்தரங்கம் பிள்ளை |
| c) | பாண்டிச்சேரி வணிகர் | 3. | மறைமலையடிகள் |
| d) | சொல்லின் செல்வர் | 4. | ஸ்ரீ புராணம். |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 2 | 3 | 1 | 4 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 4 | 1 | 3 | 2. |

7. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : பெரியாருடைய பேச்சு, எழுத்து நடை கடினமானதாக இருந்தது.

காரணம் *(R)* : பொதுமக்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதில் பெரியார் பின் வாங்கியதில்லை.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) *(A)* மற்றும் *(R)* சரியானவை, மேலும் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கின்றது

B) *(A)* மற்றும் *(R)* சரியானவை, ஆனால் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கவில்லை

C) *(A)* மட்டும் சரியானது, ஆனால் *(R)* தவறானது

D) *(A)* தவறானது, ஆனால் *(R)* சரியானது.



https://www.freshersnow.com/syllabus/

8. 'அருட்பா அன்று மருட்பா' என்ற நூலின் ஆசிரியர்

A) கதிரைவேற் பிள்ளை
B) ஆறுமுக நாவலர்
C) கதிர்காம நாதன்
D) டொமினிக் ஜீவா.

9. பாலுணர்ச்சிச் சிக்கல்களை வைத்து எழுதப்பட்ட நாவல் .................... என்பதாகும்.

A) தீ
B) செம்பருத்தி
C) சிங்காரி பார்த்த சென்னை
D) அந்தரத் தீவு.

10. பொருந்தாதவற்றை தனியே சுட்டுக :

A) தமிழில் முதல் சிறுகதை 'மங்கையர்க்கரசியின் காதல்' என்பதாகும்
B) 'காஞ்சனை' என்பது புதுமைப்பித்தனின் சிறுகதைத் தொகுப்பு
C) 'தோணி வருகிறது' என்பது ஈரோடு தமிழன்பனின் கவிதைத் தொகுப்பு
D) 'மோகமுள்' நாவலின் ஆசிரியர் சி. சு. செல்லப்பா.

11. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) புன்னைக் காயலில் அச்சகம் ஏற்படுத்தியவர் — சீகன்பால்கி
B) பொறையாறில் அச்சு வார்ப்படச்சாலை தந்தவர் — பி. ஆர். அண்ட்
C) முதன்முதலில் அச்சகம் அமைத்த தமிழர் — திருவேங்கடம்
D) அச்சு எழுத்துக்களை வடித்தவர் — அண்டிறிக் பாதிரியார்.

12. இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல்

A) தம்பிரான் வணக்கம்
B) பரமார்த்தகுரு கதை
C) விநோதரச மஞ்சரி
D) வேடிக்கை விநோதக் கதைகள்.

13. 'காரிருள் அகத்தில் நல்ல கதிர் ஒளி நீயே' எனப் பத்திரிக்கைப் பெண்ணைப் பாராட்டும் கவிஞர்

A) பாரதி
B) பாரதிதாசன்
C) கண்ணதாசன்
D) மு. மேத்தா.



https://www.freshersnow.com/syllabus/

14. 1882 இல் வார இதழாகப் பிறந்த சுதேசமித்திரன் நாளிதழாக மாறியது

A) 1897 இல்
B) 1900 இல்
C) 1924 இல்
D) 1944 இல்

15. இந்தியாவில் வெளியாகிய முதல் வண்ண நாளேடு

A) தினபூமி
B) தினத்தந்தி
C) மாலைமுரசு
D) தினஇதழ்.

16. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) களிமண் எழுத்துக்களைப் படைத்தவர் — கூடன்பர்க்
B) கனிம எழுத்துக்களைப் படைத்தவர் — ஆட்மர்
C) அச்சுக் கோர்க்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்தவர் — சர்ச்சு
D) வரி அச்சுக்கோர்ப்பைக் கண்டுபிடித்தவர் — பிசெங்.

17. காகிதத்தை முதன்முதலில் தயாரித்த தேசம்

A) இங்கிலாந்து
B) இந்தியா
C) அமெரிக்கா
D) சீனா.

18. பெண்கல்விக்காக மாதம் இருமுறை வெளிவந்த இதழ்

A) சுகுண போதினி
B) சுதேசமித்திரன்
C) சுதேசாபிமானி
D) பெண்மதி போதினி.

19. தமிழின் முதல் இதழ்

A) சுதேசமித்திரன்
B) இந்தியா
C) மாசத்தினச் சரிதை
D) ஜன விநோதினி.

20. மெட்ராஸ் கூரியர் என்னும் ஆங்கில வார இதழ் வெளிவந்த ஆண்டு

A) 1785
B) 1786
C) 1787
D) 1788.

21. பெருமங்கலம் என்பது

A) மன்னனின் முடிசூட்டு விழா
B) மன்னனின் பிறந்த நாள் விழா
C) மன்னனின் திருமண விழா
D) மன்னன் இறந்த நாள்.



https://www.freshersnow.com/syllabus/

22. புறநானூற்றுள் மிகுதியான பாடல்களைப் பாடிய புலவர்

A) பெருங்கோ பெண்டு
B) கபிலர்
C) ஔவை
D) பரணர்.

23. பண்டைப் போரில் சிறந்தது எனப்பட்ட படை

A) குதிரைப்படை
B) யானைப்படை
C) காலாட்படை
D) தேர்ப்படை.

24. மூதின் முல்லைத் துறை என்பது

A) வீரனின் ஆண்மையைக் கூறுவது
B) மன்னனின் புகழைப் பாடுவது
C) பெண்களின் வீரத்தைப் போற்றுவது
D) புலவர்களின் சிறப்பைக் கூறுவது.

25. சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்வு செய்க :

A) முரஞ்சியூர் — முடவனார்
B) கோவூர் — முடி நாகனார்
C) உறையூர் — முது கூற்றனார்
D) ஐயூர் — கிழார்.

26. சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு :

A) முதியவன் வேடத்தில் நீதி வழங்கியவன் — ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
B) கண்ணகிக்கு நீதி வழங்கியவன் — பொற்கைப் பாண்டியன்
C) பறவைக்கு நீதி வழங்கியவன் — சிபிச்சக்கரவர்த்தி
D) தன் கையைத் துண்டித்து நீதி வழங்கியவன் — கரிகாலன்.

27. அதியமான் இறந்த போது கையறு நிலையாகப் பாடிய புலவர்

A) கபிலர்
B) பரணர்
C) நச்செள்ளையார்
D) ஔவையார்.



https://www.freshersnow.com/syllabus/

28. ஔவையை வரவேற்று உபசரித்துத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டிய மன்னன்

A) நெடுங்கிள்ளி
B) தொண்டைமான்
C) அதியமான்
D) நலங்கிள்ளி.

29. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு :

A) ஆநிரை கவர்தல் — காஞ்சி
B) ஆநிரை மீட்டல் — கரந்தை
C) பிறர் நாட்டைக் கைப்பற்றப் போரிடல் — வெட்சி
D) தன் நாட்டைக் காக்கப் போரிடல் — வஞ்சி.

30. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு :

A) திருமுருகாற்றுப்படை — பாட்டுடைத் தலைவன் இளந்திரையன்
B) பொருநராற்றுப்படை — பாட்டுடைத் தலைவன் செவ்வேள்
C) சிறுபாணாற்றுப்படை — பாட்டுடைத் தலைவன் நல்லியக் கோடன்
D) பெரும்பாணாற்றுப்படை — பாட்டுடைத் தலைவன் கரிகாலன்.

31. 'உழவாரப் பணியை'க் கோயில்களில் அறிமுகப்படுத்தியவர்

A) திருஞானசம்பந்தர்
B) திருநாவுக்கரசர்
C) திருமூலர்
D) சேக்கிழார்.

32. 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பட்டவர்

A) திருநாவுக்கரசர்
B) சுந்தரர்
C) திருமூலர்
D) சேக்கிழார்.

33. ஒன்பதாம் திருமுறை என்பது

A) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
B) தேவாரம், திருவாசகம்
C) திருவாசகம், திருக்கோவை
D) திருமந்திரம், பெரியபுராணம்.

34. 'வெண்பாப் பாட்டியல்' என அழைக்கப்படும் நூல்

A) நேமிநாதம்
B) வச்சணந்திமாலை
C) நன்னூல்
D) நம்பியகப் பொருள்.



https://www.freshersnow.com/syllabus/

35. ‘முக்கனி’ நடையுடையது எனப் பரிதிமாற் கலைஞர் போற்றிய நூல்

A) கந்தபுராணம் B) பெரிய புராணம்

C) திருவிளையாடற் புராணம் D) ஸ்ரீ புராணம்.

36. ‘பாளையாம் தன்மை செத்தும், பாலனாந் தன்மை செத்தும்’ என்ற பாடல் இடம் பெற்றுள்ள காப்பியம்

A) குண்டலகேசி B) நீலகேசி

C) விம்பிசார கதை D) திருப்பதிகம்.

37. ‘புத்ததத்தர்’ எழுதிய நூல்

A) வீரசோழியம் B) அபிதர்மாவதாரம்

C) சித்தாந்தத் தொகை D) திருப்பதிகம்.

38. ஸ்ரீ புராணத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட காப்பியம்

A) மணிமேகலை B) சூளாமணி

C) வளையாபதி D) குண்டலகேசி.

39. அதிவீரராம பாண்டியன் எழுதிய நூல்

A) நைடதம் B) நளவெண்பா .

C) நீலகேசி D) செஞ்சிக் கலம்பகம்.

40. ‘சதாவதானி’ என்று அழைக்கப்பட்டவர்

A) வண்ணக் களஞ்சியப் புலவர் B) சவ்வாதுப் புலவர்

C) செய்குதம்பிப் பாவலர் D) உமறுப்புலவர்.

41. தாகூரின் கவிதைகளையும் கதைகளையும் மொழிபெயர்த்துப் புகழ்பெற்றவர்கள்

A) குமாரசாமியும், சேனாபதியும்

B) புதுமைப்பித்தனும், வ. வே. சு. ஐயரும்

C) கல்கியும், கி. வா. ஜகந்நாதனும்

D) அகிலனும், நா. பார்த்தசாரதியும்



https://www.freshersnow.com/syllabus/

42. ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கப்பட்ட ஆதீனம்

A) பேரூராதீனம் அவர்களால்

B) திருவாவடுதுறை ஆதீனம் அவர்களால்

C) சிரவை ஆதீனம் அவர்களால்

D) காஞ்சி ஆதீனம் அவர்களால்.

43. ஆண்மான் என்னும் பொருள் தரும் சொல்

A) கழை B) களை

C) பிடி D) கலை.

44. தமிழ்ச் சிறுகதையை முதலில் எழுதியவர்

A) வ. வே. சு. ஐயர் B) கு. ப. ராசகோபாலன்

C) கு. அழகிரிசாமி D) புதுமைப்பித்தன்.

45. நா. பார்த்தசாரதியின் சாகித்ய அகாதமி விருது பெற்ற நாவல்

A) சமுதாய வீதி B) சித்திரப்பாவை

C) அலைஓசை D) அகல் விளக்கு.

46. ஹைகூவின் தத்துவ இறுக்கம் குறைந்த வடிவம் என்று சொல்லப்படும் புதுக்கவிதையின் வளர்ச்சி வடிவம்

A) குக்கூ B) சென்ரியூ

C) ப்ரீ வெர்ஸ் ( free verse ) D) வசன கவிதை.

47. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : பௌத்தம் தனது வெளிப்பாடுகளை ஹைகூ வடிவில் வெளியிட்டது.

காரணம் *(R)* : பௌத்தர்களின் நாடுகளான ஜப்பானில், சீனத்தில் தோற்றம் பெற்றது; வளர்ந்தது.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) *(A)* மற்றும் *(R)* சரியானவை, மேலும் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கின்றது

B) *(A)* மற்றும் *(R)* சரியானவை, ஆனால் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கவில்லை

C) *(A)* சரி, ஆனால் *(R)* தவறு

D) *(A)* தவறு, ஆனால் *(R)* சரி.



https://www.freshersnow.com/syllabus/

48. இந்தியத் திரைப்படக்கலையின் தந்தை என்ற சிறப்பிற்குரியவர்

A) கிரிஃபித் B) அர்தீகிர்இராணி

C) டி. ஜே. பால்கே D) சத்தியஜித்ரே.

49. மக்களைச் சிரிக்க வைத்து, சிந்திக்க வைத்து, திரைப்படங்கள் மூலம் பகுத்தறிவு கொள்கைகளைப் பரப்பியவர்

A) எம். ஆர். ராதா B) எம். ஆர். ஆர். வாசு

C) கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் D) டி. ஆர். மகாலிங்கம்.

50. 'கவிராசன் கதை' என்னும் கவிதைத் தொகுப்பை அளித்த கவிஞர்

A) மு. மேத்தா B) வைரமுத்து

C) பாலா D) ஞானி.

51. முற்பிறப்பில் மணிமேகலையின் பெயர்

A) இலக்குமி B) மணிமேகலை

C) திருமகள் D) ஐயை.

52. கூளப்பநாயக்கன் விறலி விடுதூதின் ஆசிரியர்

A) உமாபதி சிவாச்சாரியார் B) ஒட்டக்கூத்தர்

C) சுப்பிரதீபக் கவிராயர் D) குமரகுருபரர்.

53. நெஞ்சுவிடு தூதின் ஆசிரியர்

A) உமாபதி சிவாச்சாரியார் B) சொக்கநாதப் புலவர்

C) திருஞான சம்பந்தர் D) செயங்கொண்டார்.

54. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்

விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' - இப்பாடல் வரி இடம்பெறும் நூல்

A) திருக்கோவையார் B) தமிழ் விடு தூது

C) குற்றாலக் குறவஞ்சி D) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

55. தக்கயாகப்பரணியின் ஆசிரியர்

A) செயங்கொண்டார் B) ஒட்டக்கூத்தர்

C) திருகூடராசப்பக் கவிராயர் D) சேரமான் பெருமாள் நாயனார்.



https://www.freshersnow.com/syllabus/

56. கொங்கணச் சித்தரின் சீடர்

A) பாம்பாட்டிசித்தர்
B) இடைக்காட்டுச் சித்தர்
C) கணபதிதாசர்
D) அகஸ்தியர்.

57. கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தி

A) அணிமா
B) கரிமா
C) ஈசத்துவம்
D) பிராகாமியம்.

58. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழின் ஆசிரியர்

A) சேக்கிழார்
B) குமரகுருபரர்
C) குலசேகர ஆழ்வார்
D) பெரியாழ்வார்.

59. 'ஆதியுலா' என அழைக்கப்பெற்ற நூல்

A) மூவருலா
B) திருக்கைலாய ஞான உலா
C) விக்கிரம சோழனுலா
D) பாண்டியன் உலா.

60. பேரிளம் பெண்ணின் வயது வரம்பு

A) 26 — 32
B) 20 — 25
C) 33 — 40
D) 12 — 13.

61. பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் ஏற்ப நடுவில் வருவது

A) உரிச்சொல்
B) வினைச்சொல்
C) இடைச்சொல்
D) பெயர்ச்சொல்.

62. பொருத்தமில்லாத தொடரைக் காண்க :

A) ஈ என்பது இழிந்தோன் பொருள் கேட்பது
B) தா என்பது ஒப்போன் பொருள் கேட்பது
C) கொடு என்பது உயர்ந்தோர் பொருள் கேட்பது
D) கொள்ளையடித்தல்.



https://www.freshersnow.com/syllabus/

63. உடலில் தோன்றும் மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர்

A) எட்டாகப் பிரிக்கிறார்
B) பத்தாகப் பிரிக்கிறார்
C) பதினைந்தாகப் பிரிக்கிறார்
D) நான்காகப் பிரிக்கிறார்.

64. நன்னூல் ஆசிரியர் பாயிரத்தை இரண்டு வகையாகப் பாகுபாடு செய்கிறார். அது

A) பொது, சிறப்பு
B) இடுகுறி, காரணம்
C) காரணம், பொது
D) இடுகுறி, பொது.

65. பவணந்தி முனிவர் நூலில் வரும் குற்றங்களை பகுக்கும் விதம்

A) பத்து
B) எட்டு
C) ஆறு
D) ஒன்பது.

66. பவணந்தி முனிவர் சார்பெழுத்துக்களை

A) எட்டாகப் பிரிக்கிறார்
B) பத்தாகப் பிரிக்கிறார்
C) ஐந்தாகப் பிரிக்கிறார்
D) மூன்றாகப் பிரிக்கிறார்.

67. பகுபத உறுப்புக்கள்

A) மூன்று
B) இரண்டு
C) ஆறு
D) எட்டு.

68. குணவீர பண்டிதர் இயற்றிய நூல்

A) மாறன் அலங்காரம்
B) நேமிநாதம்
C) வீரசோழியம்
D) வச்சணந்தி மாலை.

69. மாறன் அலங்காரம் என்ற நூலை படைத்தவர்

A) திருக்குருகைப் பெருமாள் கவிராயர்
B) புத்தமித்திரர்
C) குணவீர பண்டிதர்
D) அமிர்த சாகரர்.

70. அமிர்த சாகரர் கவிதை எழுதுவதற்கு உரிய எழுத்துக்களை

A) பதிமூன்றாகப் பாகுபாடு செய்கிறார்
B) பத்தாகப் பாகுபாடு செய்கிறார்
C) மூன்றாகப் பாகுபாடு செய்கிறார்
D) ஏழாகப் பாகுபாடு செய்கிறார்.



https://www.freshersnow.com/syllabus/

71. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க :

வாலி

I. மரபுக்கவிஞர்

II. புதுக் கவிதைகளைப் படைத்தவர்

III. சிறந்த திரைப்படப் பாடலாசிரியர்

IV. எழுத்தாளர்.

இவற்றுள் :

A) I மற்றும் II சரியானவை

B) II மற்றும் III சரியானவை

C) III மற்றும் IV சரியானவை

D) அனைத்தும் சரியானவை.

72. தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசு.

A) பக்திப்பாடல்கள்

B) கொண்டாட்டப் பாடல்கள்

C) தாலாட்டுப் பாடல்கள்

D) காதல் பாடல்கள்.

73. நாட்டுப்புற பாடல்களில் இந்தப் பாடல்களுக்கு எதிர்ப்பாட்டு இல்லை என்று சொல்வது நாட்டுப்புற வழக்காக நிலவுகின்றது

A) தாலாட்டுப் பாடல்கள்

B) ஏற்றப் பாடல்கள்

C) கொண்டாட்டப் பாடல்கள்

D) பக்திப் பாடல்கள்.

74. பாரதியின் சுயசரிதை

A) கண்ணன் பாட்டு

B) பாரதி அகவல்

C) பாரதி 66

D) ஞானரதம்.

75. பாரதியார் பாடிய மும்மணிகள்

I. கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம்

II. கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, ஞானப்பாடல்

III. குயில்பாட்டு, பாப்பா பாட்டு, கடவுள் பாட்டு

IV. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு.

இவற்றுள் :

A) II மட்டும் சரியானது

B) III மட்டும் சரியானது

C) IV மட்டும் சரியானது

D) I மட்டும் சரியானது.



https://www.freshersnow.com/syllabus/

76. சுரதாவின் கவிதைப் படைப்புகளில் தனிச்சிறப்புகளைப் பெற்றது

A) முன்னும் பின்னும்
B) ஊர்வலம்
C) தேன்மழை
D) துறைமுகம்.

77. அழ. வள்ளியப்பா

I. குழந்தை இலக்கியத்தின் முன்னோடி
II. வந்தேமாதரம் நூலை எழுதியவர்
III. பாட்டிலே காந்தி நூலை எழுதியவர்
IV. சங்கொலி கவிதைப் படைப்புக்குரியவர்.

இவற்றுள் :

A) I மற்றும் IV சரியானவை
B) I மற்றும் II சரியானவை
C) II மற்றும் IV சரியானவை
D) I மற்றும் III சரியானவை.

78. 'சமுதாய நோக்கில் பழமொழிகள்' என்ற நூலின் ஆசிரியர்

A) தமிழண்ணல்
B) கி. வா. ஜகந்நாதன்
C) டாக்டர் தே. லூர்து
D) சாலை. இளந்திரையன்.

79. பாரதியாரின் ஞான குரு

A) நிவேதிதா தேவி
B) சாரதா தேவி
C) இராமகிருஷ்ணர்
D) பாலகங்காதர திலகர்.

80. ஆசியப் பேரொளி ( **Light of Asia** ) யைத் தமிழாக்கிய கவிஞர்

A) உமர்கய்யாம்
B) அப்துல் ரஹ்மான்
C) மேத்தா
D) கவிமணி.

81. கீழ்க்கணக்கில் போர் பற்றிப் பேசும் புறநூல்

A) இன்னா நாற்பது
B) திரிகடுகம்
C) ஏலாதி
D) களவழி நாற்பது.

82. களவழி நாற்பதின் ஆசிரியர்

A) கபிலர்
B) பூதஞ்சேந்தனார்
C) கணிமேதாவியார்
D) பொய்கையார்.



https://www.freshersnow.com/syllabus/

83. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் பாடியவர்

A) நக்கீரர் B) ஔவையார்

C) நரிவெரூஉத் தலையார் D) கணியன் பூங்குன்றனார்.

84. எட்டுத்தொகை நூல்களுள் அகமும் புறமும் கலந்த நூல்

A) பதிற்றுப்பத்து B) பட்டினப்பாலை

C) பரிபாடல் D) நற்றிணை.

85. பண்டைத் தமிழகத்தில் சேரநாட்டை ஆண்ட சேரமன்னர்களின் வரலாற்றைக் கூறும் நூல்

A) புறநானூறு B) அகநானூறு

C) பதிற்றுப்பத்து D) மதுரைக்காஞ்சி.

86. கடையெழுவள்ளல்களின் வரலாற்றைக் கூறும் ஆற்றுப்படை நூல்

A) திருமுருகாற்றுப்படை B) சிறுபாணாற்றுப்படை

C) பெரும்பாணாற்றுப்படை D) பொருநராற்றுப்படை.

87. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகம்பற்றியன

A) 6 நூல்கள் B) 4 நூல்கள்

C) 2 நூல்கள் D) 5 நூல்கள்.

88. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதைப் பறைசாற்றும் காப்பியம்

A) சிலப்பதிகாரம் B) பெரியபுராணம்

C) சீவகசிந்தாமணி D) மணிமேகலை.

89. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர்

A) பொய்கையாழ்வார் B) பூதத்தாழ்வார்

C) பேயாழ்வார் D) நாதமுனிகள்.



https://www.freshersnow.com/syllabus/

90. கண்ணதாசன் எழுதிய இறவாக்காவியம்

A) ஆட்டனத்தி ஆதிமந்தி B) மாங்கனி

C) இயேசுகாவியம் D) தமிழ்ப்பாவை.

91. தமிழ் மொழி வரலாற்றினை அறிவதற்கு பெரும்பங்காற்றுவது

A) கல்வெட்டுக்கள் B) புதைப்பொருட்கள்

C) இலக்கியங்கள் D) வெளிநாட்டார் குறிப்புகள்.

92. குகைக் கல்வெட்டுக்கள் அதிகம் கண்டுபிடிக்கப்பட்ட பகுதி

A) சேரநாடு B) சோழநாடு

C) பாண்டிய நாடு D) தொண்டை நாடு.

93. கோண்டா எப்பகுதியில் பேசப்படுகிறது ?

A) ஆந்திரப்பிரதேசம் B) மத்தியப்பிரதேசம்

C) ஒரிசா D) பலுசிஸ்தான்.

94. 'நகர மக்களின் பேச்சிற்கும், நாட்டுப்புற மக்களின் பேச்சிற்கும் இலக்கண அமைப்பில் வேறுபாடில்லை' என்று கூறியவர்

A) பிரில் B) வெண்ட்ரியே

C) டாக்டர். மு. வ D) யெஸ்பர்ஸன்.

95. சிலப்பதிகாரம் வட்டெழுத்துக்களை எவ்வாறு குறிப்பிட்டது ?

A) கிரந்த எழுத்து B) கோலெழுத்து

C) ஓவிய எழுத்து D) பிராமி எழுத்து.

96. பழங்காலத்தில் தமிழில் எழுத்துக்களைக் குறித்த விதம்

A) ஓவியம் B) வரிவடிவம்

C) நெடுங்கணக்கு D) ஒலி வடிவம்.

97. தமிழிலக்கியத்தில் 'எழுத்து' என்பதற்குப் பொருள்

A) ஒப்பனை B) கூத்து

C) ஓவியம் D) நாடகம்.



https://www.freshersnow.com/syllabus/

98. திராவிட மொழியியலின் தந்தையாகக் கருதப்படுபவர்

A) அகத்தியலிங்கம்
B) டாக்டர் மு. வ
C) டாக்டர் தெ. பொ. மீ
D) டாக்டர். கால்டுவெல்.

99. நான்கு வகை மொழிக் குடும்பங்களுள் தொன்மையானது

A) ஆரிய மொழிக்குடும்பம்
B) ஆஸ்ட்ரிக் மொழிக்குடும்பம்
C) சீன மொழிக்குடும்பம்
D) திராவிட மொழிக் குடும்பம்.

100. 'அஃறிணைப் பெயர்ச் சொற்கள் பன்மைப்பொருளை உணர்த்தும் போது 'கள்' விகுதி பெறும்'-என்று உணர்த்திய முதல் இலக்கண நூல்

A) நன்னூல்
B) அகத்தியம்
C) தொல்காப்பியம்
D) தண்டியலங்காரம்.

101. ஏறு தழுவல் இடம் பெற்றுள்ள கலிப்பாடல்

A) குறிஞ்சிக் கலி
B) முல்லைக் கலி
C) மருதக் கலி
D) நெய்தற் கலி.

102. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு :

A) அகநானூறைத் தொகுத்தவர் — உருத்திரன் சன்மனார்
B) கலித்தொகையைத் தொகுத்தவர் — பூரிக்கோ
C) ஐங்குறுநூறைத் தொகுத்தவர் — நல்லந்துவனார்
D) குறுந்தொகையைத் தொகுத்தவர் — கூடலூர்க்கிழார்.

103. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடு :

A) நீர், நிலம், தீ, வளி
B) தீ, நீர், வளி, நிலம்
C) நிலம், தீ, நீர், வளி
D) வளி, நீர், தீ, நிலம்.



https://www.freshersnow.com/syllabus/

104. முதற்பகுதியைப் படித்து விட்டு, இரண்டாம் பகுதியில் உள்ளவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

நெடுந்தொகை

I. நற்றிணை

II. கலித்தொகை

III. அகநானூறு

IV. நெடுநல்வாடை.

இவற்றுள் :

A) III மட்டும் சரியானது

B) I மட்டும் சரியானது

C) IV மட்டும் சரியானது

D) III மற்றும் IV சரியானவை.

105. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | குறிஞ்சிப்பாட்டு | 1. | 103 அடிகள் |
| b) | முல்லைப்பாட்டு | 2. | 269 அடிகள் |
| c) | மதுரைக்காஞ்சி | 3. | 261 அடிகள் |
| d) | சிறுபாணாற்றுப்படை | 4. | 782 அடிகள். |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 3 | 1 | 4 | 2. |

106. குறிஞ்சிப்பாட்டு எந்த அரசனுக்காக இயற்றப்பட்டது ?

A) பாண்டியன் நெடுஞ்செழியன்

B) அறிவுடை நம்பி

C) ஆரிய அரசன் பிரகதத்தன்

D) இளந்திரையன்.



https://www.freshersnow.com/syllabus/

107. குறுந்தொகைப் பாடலைத் தொகுப்பித்தவர்

A) உப்பூரி குடி கிழார்.

B) கூடலூர் கிழார்

C) உருத்திரசன்மன்

D) பூரிக்கோ.

108. **பட்டியல் I** ஐ **பட்டியல் II** உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| a) | மோத்தை | 1. | ஈரறிவு உயிர் |
| b) | பார்ப்பு | 2. | ஆண்பாற் பெயர் |
| c) | நந்து | 3. | மூன்றறிவு உயிர் |
| d) | எறும்பு | 4. | இளமைப் பெயர். |

*குறியீடுகள் :*

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3. |

109. பெண்களின் துறவு நிலையைப் பாடிய ஒரே பெண்பாற் புலவர்

A) வெண்ணிக் குயத்தியார்

B) வெண் பூதியார்

C) காவற் பெண்டு

D) மாற் பித்தியார்.

110. 'ஈன்று புறந்தருதல்' என்ற பாடலைப் பாடியவர்

A) பொன்முடியார்

B) பொன்மணியார்

C) நல் வெள்ளியார்

D) குறமகள் இளவெயினி.

111. குற்றியலிகரம் என்பது

A) 'உ' ஓசையில் குறுகி ஒலிப்பது

B) 'இ' ஓசையில் குறுகி ஒலிப்பது

C) 'ஐ' ஓசையில் குறுகி ஒலிப்பது

D) 'ஔ' ஓசையில் குறுகி ஒலிப்பது.



https://www.freshersnow.com/syllabus/

112. மூவகைச் சீர்கள் எத்தனை வரும் ?

A) பத்து B) எட்டு

C) ஐந்து D) பதினாறு

113. காய்ச்சீரில் வரும் அசைகள்

A) ஒன்று B) இரண்டு

C) மூன்று D) நான்கு.

114. நான்கு சீர்கள் வரும் அடி

A) அளவடி B) சிந்தடி

C) நெடிலடி D) கழி நெடிலடி.

115. கடைசி அடியில் மூன்று சீர்கள் மட்டும் வந்தால்

A) வெண்பா B) ஆசிரியப்பா

C) கலிப்பா D) வஞ்சிப்பா.

116. வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்து வருவது

A) மருட்பா B) கலிவெண்பா

C) வெண்கலிப்பா D) வஞ்சிப்பா.

117. 'கூன்' என்பது

A) ஒரு பாடலின் தொடர் பொருளைக் குறிக்கும்

B) ஒரு பாடலின் வினைப் பொருளைக் குறிக்கும்

C) ஒரு பாடலின் எழுத்தைக் குறிக்கும்

D) ஒரு பாடலின் சொல்லைக் குறிக்கும்.

118. கற்பிற்குரிய பிரிவுகள்

A) ஐந்து வகைப்படும் B) ஆறு வகைப்படும்

C) ஏழு வகைப்ப்டும் D) எட்டு வகைப்படும்.

119. பகற்குறி என்பது

A) தலைவியைப் பகலில் சந்திப்பது B) தலைவியை இரவில் சந்திப்பது

C) தலைவியை மாலையில் சந்திப்பது D) தலைவியைக் காலையில் சந்திப்பது.



https://www.freshersnow.com/syllabus/

120. உடன் போக்கு என்பது

A) தலைவி செல்லுதல்

B) தலைவன் செல்லுதல்

C) தலைவன் தலைவி இருவரும் புறப்படல்

D) தோழி புறப்படல்.

121. 'அச்சம் தவிர்' என்னும் புதிய ஆத்திச்சூடி எழுதியவர்

A) பாரதிதாசன் B) ஔவையார்

C) பாரதியார் D) வ. சுப. மாணிக்கம்.

122. 'கிளைபல தாங்கேல்' என்னும் புதிய ஆத்திச்சூடி எழுதியவர்

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) வ. சுப. மாணிக்கம் D) நா. ரா. நாச்சியப்பன்.

123. 'மூதுரை' நூலின் வேறு பெயர்

A) சொல் உண்டாம் B) மெய்யுண்டாம்

C) வாக்குண்டாம் D) கருத்துண்டாம்.

124. 'நீதிநெறி விளக்கத்தின்' ஆசிரியர்

A) தாயுமானவர் B) குமரகுருபரர்

C) நாலடியார் D) சமண முனிவர்கள்.

125. 'சிறுபஞ்ச மூலம்' நூலின் ஆசிரியர்

A) நாலடியார் B) நல்லாதனார்

C) காரியாசான் D) ஔவையார்.

126. சோழன் கோச்செங்கணானும் சேரமான் கணைக்காலிரும் பொறையும் போரிட்ட இடம்

A) குடவாயில் கோட்டம் B) சேரமன்னன் அரண்மனை

C) கழுமலம் D) வெண்ணிப் பறத்தலை.

127. திருக்குறளின் அறத்துப்பால் உணர்த்தும் கருத்து :

A) கூட்டு வாழ்க்கையின் சிறப்பு B) தனிமனித வாழ்க்கையின் மேன்மை

C) காதல் வாழ்க்கையின் ஒழுக்கம் D) இல்லற வாழ்க்கையின் மான்பு.



https://www.freshersnow.com/syllabus/

128. 'திரிகடுகம்' நூலின் ஆசிரியர்

A) நப்பூதனார் B) நல்லாதனார்

C) விளம்பிநாகனார் D) பதுமனார்.

129. 'இன்னா நாற்பது' நூலின் ஆசிரியர்

A) கபிலர் B) பரணர்

C) சேக்கிழார் D) ஔவையார்.

130. 'பித்தா பிறை சூடி .... ' எனப் பாடியவர்

A) திருஞான சம்பந்தர் B) திருநாவுக்கரசர்

C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்.

131. 'மிருச்சகடிகம்' என்னும் வடமொழி நாடகம் தமிழில் எவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டது ?

A) மண்ணியல் சிறுதேர் B) மனோன்மணியம்

C) மருமக்கள் வழி மான்மியம் D) சாகுந்தல நாடகம்.

132. 'The Vicar of Wake Field' என்ற ஆங்கில நூலைத் தழுவி பேரா. பெ. சுந்தரனார் தமிழில் எழுதிய நூல்

A) சிவகாமி சரிதை B) சிவகாமியின் சபதம்

C) கலாவதி D) இசைத்தமிழ்.

133. 'சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்', மணிமேகலை கதைச் சுருக்கம், 'உதயணன் கதைச் சுருக்கம்' ஆகிய நூல்களை உரைநடை வடிவில் தந்தவர்

A) உ. வே. சா B) நச்சினார்க்கினியர்

C) கவிமணி D) கண்ணதாசன்.

134. கன்னட தலித் எழுத்துக்களின் அறிமுக நூலாக வந்த 'புதைந்த காற்று' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

A) சாந்தா தத் B) சரஸ்வதி ராம்நாத்

C) பாவண்ணன் D) சுஜாதா.

135. 'விண்வெளி கிராமம்' என்ற அறிவியல் கதைத் தொகுப்பை வெளியிட்டவர்

A) சு. முத்து B) வண்ணதாசன்

C) நாஞ்சில் நாடன் D) ந. முத்துசாமி.



https://www.freshersnow.com/syllabus/

136. 'கொலேஜ்' வடிவில் பின் நவீனத்துவத்துடன் எழுதப்பட்ட தமிழவனின் புதினம்

A) ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்

B) சாய்வு நாற்காலி

C) அரசிகள் அழுவதில்லை

D) அமர்சோனா பங்களா.

137. இந்து-முஸ்லீம் கலவரத்தைக் கருவாகக் கொண்ட நாவல்

A) முட்டம

B) ஒற்றன்

C) பாலைப்புறா

D) பிறகு.

138. செருப்பு தைக்கும் தொழிலாளியின் சிக்கல்களைக் கூறும் புதினம்

A) பிறகு

B) காகித மலர்கள்

C) தலைமுறைகள்

D) மின் உலகம்.

139. மீனவத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இராஜம் கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட புதினம்

A) கரிப்பு மணிகள்

B) அலைவாய்க் கரையில்

C) குறிஞ்சித் தேன்

D) மலரும் சருகும்.

140. மதுரை வட்டார மொழிநடையில் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு நிகழ்வை நேரில் கண்டு வர்ணிக்கும் பாணியில் 'வாடி வாசல்' என்ற நாவலை எழுதியவர்

A) சி. சு. செல்லப்பா

B) கு. அழகிரிசாமி

C) லஷ்மி

D) விந்தன்.

141. 'தினத்தந்தி' இதழைத் தொடங்கியவர்

A) சி. பா. ஆதித்தனார்

B) கணேசன்

C) ஜீவானந்தம்

D) வாசன்.

142. தமிழ் இதழ்கள் குறித்துத் தமிழில் முதன் முதலில் எழுதியவர்

A) திரு. வி. க

B) கோதை நாயகியம்மாள்

C) சே. ப. நரசிம்மலு

D) வடிவேலு செட்டியார்.



https://www.freshersnow.com/syllabus/

143. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) தமிழில் வெளியான முதல் சட்ட இதழ் — சித்தாந்த சங்கிரகம்

B) தமிழில் வெளியான முதல் அறிவியல் இதழ் — சினிமா உலகம்

C) தமிழில் வெளியான முதல் திரைப்பட இதழ் — அகத்திய வர்த்தமானி

D) தமிழில் வெளியான முதல் மருத்துவ இதழ் — தமிழ் நேசன்.

144. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

A) மகளிர் இதழ் — மேழிச்செல்வம்

B) குழந்தை இதழ் — சுமங்கலி

C) வேளாண்மை இதழ் — அணில்

D) மருத்துவ இதழ் — இயற்கை.

145. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடுக்க :

A) சுக்கு, திப்பிலி, மிளகு, திரிகடுகம்

B) சுக்கு, மிளகு, திரிகடுகம், திப்பிலி

C) திரிகடுகம், சுக்கு, திப்பிலி, மிளகு

D) திரிகடுகம், சுக்கு, மிளகு, திப்பிலி

146. அமித சாகரர் எழுதிய படைப்பு

A) யாப்பியல

B) யாப்பருங்கலக் காரிகை

C) செய்யுளியல்

D) அணி இலக்கணம்.

147. உலா நூல்களில் முதலாவதாகப் பாடப்பெற்றது

A) திருக்கயிலாய ஞான உலா

B) ஆதி உலா

C) ஒட்டக்கூத்தர் உலா

D) குற்றாலநாதர் உலா.

148. 'பிசிராந்தையார்' என்ற நாடகத்தின் ஆசிரியர்

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) கண்ணதாசன்

D) வாணிதாசன்.



https://www.freshersnow.com/syllabus/

149. 'பதினெண் கீழ்க்கணக்கு' நூல்களில் உள்ள அறநூல்கள்

A) 10 B) 11

C) 18 D) 9.

150. தமிழில் தோன்றிய முதல் நாவல்

A) திக்கற்ற இரு குழந்தைகள் B) பிரதாப முதலியார் சரித்திரம்

C) சிவகாமியின் சபதம் D) வேங்கையின் மைந்தன்.

151. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூம்' எனக் கூறும் காப்பியம்

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) வளையாபதி

D) குண்டலகேசி.

152. வளையாபதி காப்பியத்தைக் கண்டெடுத்து பதிப்பித்த தமிழறிஞர்

A) திரு. வி. க

B) மறைமலை அடிகள்

C) உ. வே. சாமிநாதய்யர்

D) மு. வரதராசனார்.

153. தாயுமானவர் பாடல்களுக்கு .................. என்று சிறப்புப் பெயர் உண்டு. அது

A) தமிழ்மறை B) தமிழ்ச்செல்வம்

C) தமிழ்மொழியின் உபநிடதம் D) தெய்வப் பாசுரங்கள்.

154. கீழ்க்கண்ட கூற்றுகளில் மிகச் சரியானதைத் தேர்ந்தெடுக்க :

நீலகேசி என்ற நூல் தோன்றியதன் காரணம்

A) சமண சமயக் கருத்துக்களைப் பரப்ப

B) பௌத்த நூலான குண்டலகேசியை மறுக்க

C) நீலகேசியின் வாதத்திறமை காட்ட

D) காப்பிய இலக்கியத்திற்கு வலுவூட்ட.



https://www.freshersnow.com/syllabus/

155. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடுக்க :

A) சிலம்பு, சிந்தாமணி, மேகலை, வளையாபதி

B) சிலம்பு, மேகலை, சிந்தாமணி, வளையாபதி

C) சிலம்பு, வளையாபதி, மேகலை, சிந்தாமணி

D) சிலம்பு, வளையாபதி, சிந்தாமணி, மேகலை.

156. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : சிலம்பு, மணிமேகலை இரண்டும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றியவை

காரணம் *(R)* : இவை இரண்டும் 'இரட்டைக் காப்பியங்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) *(A)* மற்றும் *(R)* சரியானவை, மேலும் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கின்றது

B) *(A)* மற்றும் *(R)* சரியானவை ஆனால் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கவில்லை

C) *(A)* மட்டும் சரியானது, ஆனால் *(R)* தவறானது

D) *(A)* தவறானது, ஆனால் *(R)* சரியானது.

157. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி :

கூற்று *(A)* : தமிழ் மரபிற்கேற்ப வான்மீகியின் இராமாயணத்தைக் கம்பன் தமிழில் தந்தான்.

காரணம் *(R)* : கம்பனில் சீதை இருந்த பர்ணசாலையைப் பெயர்த்து எடுத்துச் சென்றான் இராவணன். வான்மீகியில் இராவணன் சீதையைப் பற்றி இழுத்துச் சென்றான்.

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :

A) *(A)* மற்றும் *(R)* சரியானவை, மேலும் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கின்றது

B) *(A)* மற்றும் *(R)* சரியானவை, ஆனால் *(A)* வின் கூற்றை *(R)* மெய்ப்பிக்கவில்லை

C) *(A)* மட்டும் சரியானது, ஆனால் *(R)* தவறானது

D) *(A)* தவறானது, ஆனால் *(R)* சரியானது.



https://www.freshersnow.com/syllabus/

158. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர்

A) சீத்தலைச் சாத்தனார்
B) இளங்கோவடிகள்
C) வீரமாமுனிவர்
D) பவணந்தியார்.

159. தமிழ் மொழியில் தோன்றிய முதற்காப்பியம்

A) மணிமேகலை
B) சீவக சிந்தாமணி
C) சிலப்பதிகாரம்
D) வளையாபதி.

160. ஆதிரையின் கணவன் பெயர்

A) நகுலன்
B) துரியன்
C) சாதுவன்
D) கோவலன்.

161. வீரமாமுனிவர் இயற்றிய உலா

A) பெரியார் உலா
B) காமராசர் உலா
C) ஆதியுலா
D) அடைக்கல நாயகி உலா.

162. ஒட்டக்கூத்தர் பாடிய பிள்ளைத்தமிழ்

A) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
B) குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்
C) காந்தியம்மை பிள்ளைத்தமிழ்
D) சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

163. திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் இயற்றியவர்

A) சுந்தரம்பிள்ளை
B) சிவஞான சுவாமிகள்
C) பகழிக்கூத்தர்
D) சேக்கிழார்.



https://www.freshersnow.com/syllabus/

164. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | அகத்தியர் | 1. | மருதமலை |
| b) | திருமூலர் | 2. | பழனி |
| c) | போகர் | 3. | சிதம்பரம் |
| d) | பாம்பாட்டிச் சித்தர் | 4. | பொதியமலை. |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1. |

165. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | சின்னூல் | 1. | வரையறுத்த பட்டியல் |
| b) | குட்டித் தொல்காப்பியம் | 2. | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி |
| c) | குட்டித் திருவாசகம் | 3. | நேமிநாதம் |
| d) | சம்பந்தப் பாட்டியல் | 4. | இலக்கண விளக்கம். |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 4 | 2 | 1 | 3. |



https://www.freshersnow.com/syllabus/

166. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடுக்க :

A) சப்பாணி, காப்பு, தால், செங்கீரை B) தால், செங்கீரை, காப்பு, சப்பாணி

C) செங்கீரை, தால், சப்பாணி, காப்பு D) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி.

167. சரியான வரிசை முறையினைத் தேர்ந்தெடுக்க :

A) மங்கை, மடந்தை, பெதும்பை, பேதை

B) மடந்தை, மங்கை, பேதை, பெதும்பை

C) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை

D) பெதும்பை, பேதை, மடந்தை, மங்கை.

168. 'அற்புதத் திருவந்தாதி'யை இயற்றிய பெண் புலவர்

A) அள்ளூர் நன்முல்லையார் B) காரைக்கால் அம்மையார்

C) ஔவையார் D) ஒக்கூர் மாசாத்தியார்.

169. கலம்பகம் என்னும் சிற்றிலக்கியம் எத்தனை உறுப்புக்களை உடையது ?

A) 15 B) 17

C) 18 D) 21.

170. வினைச்சொற்கள் வேற்றுமை உருபுகளை

A) ஏற்காது B) ஏற்கும்

C) விட்டுவிடும் D) புணரும்.

171. தென்னிந்திய மொழிகளை நிஷத மொழிகள் ( Nishada languages ) என்று பெயரிட்டவர்

A) தெ. பொ. மீ B) கிரியர்ஸன்

C) மாக்ஸ் முல்லர் D) கேம்பல்.

172. 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என்னும் தொடர் இடம் பெற்ற நூல்

A) மதுரைக்காஞ்சி B) நெடுநல்வாடை

C) முல்லைப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு.



https://www.freshersnow.com/syllabus/

173. மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட பாட்டு

A) மதுரைக்காஞ்சி B) சிறுபாணாற்றுப்படை

C) முல்லைப்பாட்டு D) நெடுநல்வாடை.

174. அகத்தில் இடம் பெற்றுள்ள இசைப்பாடல் நூல்

A) நற்றிணை B) குறுந்தொகை

C) ஐங்குறுநூறு D) கலித்தொகை.

175. புகார் நகரின் பெருமை பேசுவதற்காக எழுதப்பட்ட நூல்

A) மதுரைக்காஞ்சி B) பெரும்பாணாற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை D) பட்டினப்பாலை.

176. நப்பூதனார் பாடியது

A) திருமுருகாற்றுப்படை B) நெடுநல்வாடை

C) முல்லைப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு.

177. 'செம்புலப் பெயல்நீரார்' என்பது

A) இயற்பெயர் B) ஊரால் பெற்ற பெயர்

C) தொடரால் பெற்ற பெயர் D) உவமையால் பெற்ற பெயர்.

178. 'மருவினிய' என்னும் அடைபெற்ற நூல்

A) மதுரைக்காஞ்சி B) நெடுநல்வாடை

C) குறிஞ்சிப்பாட்டு D) மலைபடுகடாம்.

179. காலத்தால் பெயர்பெற்ற கீழ்க்கணக்கு நூல்

A) கார் நாற்பது B) நெடுநல்வாடை

C) முல்லைப்பாட்டு D) களவழி நாற்பது.

180. நற்றிணையை முதன்முதலாகப் பதிப்பித்தவர்

A) மகாவித்துவான் சண்முகம் பிள்ளை B) சி. வை. தாமோதரம் பிள்ளை

C) டாக்டர். உ. வே. சா D) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

181. 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்னும் தொல்காப்பிய நூற்பாவை எதற்குச் சேர்க்கலாம் ?

A) கலம்பகம் B) உலா

C) மடல் D) அம்மானை.



https://www.freshersnow.com/syllabus/

182. 'குழவி மருங்கினும் கிளவதாகும்' என்ற தொடர் எந்த சிற்றிலக்கியத்தைக் குறிக்கும் ?

A) பிள்ளைத்தமிழ்
B) உலா
C) தூது
D) மாலை.

183. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை

A) திரு. வி. க
B) ஆறுமுக நாவலர்
C) மறைமலை அடிகள்
D) கதிரேசச் செட்டியார்.

184. உவமைக்கவிஞர் என்று புகழப்பட்டவர்

A) சாலை. இளந்திரையன்
B) அழ. வள்ளியப்பா
C) சுரதா
D) முடியரசன்.

185. யாப்பருங்கலங்காரிகையை இயற்றியவர்

A) குணசாகரர்
B) அமிர்த சாகரர்
C) அகத்தியர்
D) பவணந்தி.

186. கீழ்க்கண்ட கூற்றுகளில் மிகச் சரியானதைத் தேர்ந்தெடுக்க :

தொல்காப்பியத்தைச் சிறப்பான வாழ்க்கை இலக்கணம் என்று சொல்லக் காரணம்

A) எழுத்துக்களைப் பற்றி எடுத்துரைப்பதால்
B) சொற்களின் அமைப்பைக் கூறுவதால்
C) இலக்கியக் கொள்கையை விளக்குவதால்
D) பொருளதிகாரம் அமையப் பெற்றதால்.

187. பவணந்தியார் எழுதிய இலக்கணம்

A) வீரசோழியம்
B) சேனாவரையம்
C) நன்னூல்
D) நறுந்தொகை.

188. கீழ்க்கண்ட கூற்றுகளில் மிகச் சரியானதைத் தேர்ந்தெடுக்க :

உ. வே. சாமிநாதய்யர் 'தமிழ்த்தாத்தா' எனப் பாராட்டப்படுவது

A) ஏடுகள் தேடிப் பதிப்பித்ததால்
B) 'என் சரித்திரம்' என்ற வாழ்க்கை வரலாற்றை எழுதியதால்
C) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவராக இருந்ததால்
D) சிறந்த உரைநடை நூல்களை எழுதியதால்.



https://www.freshersnow.com/syllabus/

189. பண்டைத் தமிழர் திருமண முறையைச் சித்தரிக்கும் அக இலக்கியம்

A) நற்றிணை B) குறுந்தொகை

C) அகநானூறு D) ஐங்குறுநூறு.

190. **பட்டியல் I** ஐ **பட்டியல் II** உடன் சரியாகப் பொருத்தி, கீழ்க் குறிப்பிட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சரியான விடையைத் தேர்வு செய்க :

| **பட்டியல் I** | | **பட்டியல் II** | |
|---|---|---|---|
| a) | மருதத் திணை | 1. | ஓதலாந்தையார் |
| b) | நெய்தல் திணை | 2. | கபிலனார் |
| c) | குறிஞ்சித் திணை | 3. | அம்மூவனார் |
| d) | பாலைத் திணை | 4. | ஓரம் போகியார். |

*குறியீடுகள் :*

| | ***a*** | ***b*** | ***c*** | ***d*** |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1. |

191. அகப்பாட்டு உறுப்புக்களின் எண்ணிக்கை

A) பத்து B) எட்டு

C) ஆறு D) பன்னிரண்டு.

192. 'பாதீடு' என்ற துறை

A) பசுக்களைப் பங்கிடுதல் B) பசுக்களை ஓட்டுதல்

C) பசுக்களை மீட்டல் D) பசுக்களைக் காத்தல்.

193. 'அதரிடைச் செலவு' என்ற துறை

A) கரந்தை வீரர்கள் உடனடியாகப் புறப்படல்

B) நொச்சி வீரர்கள் புறப்படல்

C) வஞ்சி வீரர்கள் புறப்படல்

D) இவற்றுள் எதுவுமில்லை.



https://www.freshersnow.com/syllabus/

194. 'மகட்பாற் காஞ்சி' என்பது

A) மகளைத்தர ஒப்புதல்
B) மகளைத்தர மறுத்தல்
C) மகளைத் திருமணம் செய்தல்
D) மகளை அடித்தல்.

195. 'நொச்சி' என்பது

A) மதிலின் உட்புறக்காவல்
B) மதிலின் வெளிப்புறக்காவல்
C) மதில் சண்டை
D) மதிலை உடைத்தல்.

196. 'பாடாண்திணை' என்பது

A) வெற்றி பெற்ற அரசனைப் புகழ்தல்
B) பாடத் தகுந்த ஆண்மகனைப் பாடுதல்
C) தோல்வியடைந்தவனை இகழ்தல்
D) தோல்வியடைந்தவனைப் பாராட்டல்.

197. தண்டியலங்காரம் என்ற நூல்

A) கன்னட நூலைத் தழுவியது
B) மலையாள நூலைத் தழுவியது
C) வடமொழி நூலைத் தழுவியது
D) தெலுங்கு நூலைத் தழுவியது.

198. சிறுகதையின் கூறுகளுள் சிறப்புடையன

A) கதைக்கரு, கதைப்பின்னல்
B) கதைமாந்தரின் படைப்பு, சூழலமைவு
C) நோக்குநிலை, குறியீடு
D) இவை அனைத்தும்.

199. கீழ்க்கண்டவற்றுள் மு. வ. வின் சிறுகதைத் தொகுப்பு

A) விடுதலையா ?
B) காஞ்சனை
C) அக்கரைச் சீமையிலே
D) தந்தைக்காக

200. 'கிராமியச் சூழல்களை முழுவதும் பயன்படுத்தி வட்டார நாவல் என்ற துறையை முதன்முதலாக இந்தியாவில் உருவாக்கியவர்' என்ற பெருமைக்குரியவர்

A) ஆர். சண்முகசுந்தரம்
B) மாதவையா
C) சங்கரராம்
D) க.நா.சு.



https://www.freshersnow.com/syllabus/